பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 03 சனிக்கிழமை 17.05.2025 கதிர் 189

# ஆயுதமேந்தி செயற்பட்ட காலத்திற்கு ஜேவிபியாக அநுர திரும்பக்கூடாது

## ஜனாதிபதியின் எச்சரிக்கை குறித்து சுமந்திரன் சீற்றம்

நிறைவேற்றதிகாரத்தைக்காண்பித்து அச்சுறுத்தும்ஜனாதிபதியின்மிரட்டலுக்கு நாம் அஞ்சப்போவதில்லை. நாம் ஜனநாயகவாதிகள். எனவே நாங்கள் மக்களின் தீர்ப்புக்கு மதிப்பளித்து செயற்படுவோம். அதேபோன்று ஜனாதிபதியும் மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்கவேண்டும். மாறாக ஜேவிபியாக ஆயுதமேந்தி செயற்பட்ட காலத்துக்கு திரும்பக்கூடாது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்



பொதுச்செயலாளர் சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில்மக்கள்விடுதலைமுன்னணியின் 60ஆவது ஆண்டு விழா நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியை தாம் கைப்பற்றிவிடுவோம் என எச்சரிக்கும் தொனியில் கூறியிருப்பது மிகவும் துரதிஷ்டவசமான விடயமாகும்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தம்மிடம் இருப்பதாகக் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் நேற்று பேச்சு நடந்தது. இதைத் தொடர்ந்து, உள்ளூராட்சி ☞2

## பட்டதாரிகள் போராட்டத்தில் எட்டுப் பேர் நேற்றுக் கைது

நடந்து முடிந்த சுகாதார ஊழியர் பயிற்சி ஆட்சேர்ப்பு திறன்காண் போட்டிப் பரீட்சைக்கு எதிர்ப்பு தெரிவித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி ஒன்றிணைந்த சுகாதார மற்றும் விஞ்ஞானப் பட்டதாரிகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் அனைத்துப் பல்கலைக்கழக ☞2

## முன்னாள் அமைச்சரை கைதுசெய்ய பிடியாணை

நோய்க்கிருமிகளைக் கொண்ட கரிம உரத்தை கப்பல் மூலம்இறக்குமதி செய்ததன் மூலம் 1.3 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படும் வழக்கு விசாரணைக்காக லஞ்ச ஒழிப்பு ஆணையத்தில் ஆஜராகத் தவறிய முன்னாள் ☞8

## தென்னக்கோனுக்கு எதிரான விசாரணை மே 19 தொடக்கம்

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படும் தவறான மற்றும் தனது பதவியின் அதிகாரங்களை முறைகேடாக பயன்படுத்தியமைதொடர்பில் விசாரணை மேற்கொண்டுஅறிக்கைசமர்ப்பிக்க ☞8

## கொட்டாஞ்சேனையில் நேற்றிரவு துப்பாக்கிச்சூடு

கொட்டாஞ்சேனை சுமித்ராராம வீதியில் நேற்றிரவு துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டிற்கான காரணம் தொடர்பில்கொட்டாஞ்சேனைபொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## காணிகளை அரசுடமையாக்குவதை எதிர்த்து

# உலகையே உலுப்பும் வகையில் போராட்டத்தில் வந்து இணைக

## தமிழ் அரசு செயலாளர் சுமந்திரன் அழைப்பு

தமிழ் மக்களின் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசுடமையாக்கும் ஆளும்தரப்பின் வர்த்தமானி அறிவித்தலை திரும்பப் பெறவில்லையாயின் உலகையே உலுப்பும் வகையிலான ஒரு பெரும் போராட்டத்தில் அனைவரும் வந்து இணையவேண்டும். அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், சமூகநிறுவனங்கள்எனஅனைவரும் ஒன்றிணைந்துஇந்தப்போராட்டத்தை முன்னெடுக்கவேண்டும்.வர்த்தமானி அறிவித்தல் மே 28க்கு முன்னர் மீளப்பெறப்படாவிடின், மே 29 முதல் இந்தப் பெரும் போராட்டம் ஆரம்பமாகும் என்று தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில், யாழ். மாவட்டம் வடமராட்சியில் ☞2

## உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைக்க காங்கிரஸ் – ஜனநாயக கூட்டணி இணக்கம்

வட, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை குறிப்பாக ஆளும்தேசியமக்கள்சக்திகைப்பற்றுவதற்கு இடமளிக்காமல், தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைப்பது குறித்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடி முடிவு செய்துள்ளன.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு இடையிலான இந்தக் கூட்டம் வெள்ளிக்கிழமை யாழ். கந்தரோடையில் அமைந்துள்ள புளொட் தலைவர் சித்தார்த்தனின் இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில்ஜனநாயகதமிழ்தேசியக் கூட்டணி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் ☞2

## 4 சபைகளின் ஆட்சியைக் கேட்கிறது ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி

### நல்லெண்ண அடிப்படையிலாம்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் அரசுக் கட்சி முன்னிலைவகிக்கும்உள்ளூராட்சிமன்றங்களில்அக்கட்சி ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, இருப்பினும் நல்லெண்ண அடிப்படையில் 4 பிரதேச சபைகளில் தாம் ஆட்சியமைப்பதற்கு தமிழ் அரசுக் கட்சி இடமளிக்கவேண்டும் எனக் கோரிக்கைவிடுத்துள்ளது.

உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலில் இலங்கைத் தமிழரசுக்கட்சி வடக்கு, கிழக்கில் 35 சபைகளில் முதல்நிலை பெற்றுள்ள நிலையில், அச்சபைகளில் ஆட்சியமைப்பதற்கு தார்மீக அடிப்படையில் ஏனைய தமிழ், முஸ்லிம்கட்சிகள்ஒத்துழைக்கவேண்டும் என கட்சியின் அரசியல்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அக்கட்சியின் பதில் பொதுச்செயலாளரும், ஊடகப்பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ☞8

## ஐ.நாவின் பொறுப்புக்கூறல் திட்டம் தொடர வேண்டியது மிக அவசியம்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும்'பொறுப்புக் கூறல் செயற்திட்டம்' எதிர்வரும் செப்டெம்பர் மாதக்கூட்டத்தொடரில் மீளப்புதுப்பிக்கப்படவேண்டும். இசைப்பிரியாபோன்றபெண்கள்மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார்உள்ளடங்கலாகபாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு அச்செயற்திட்டம் தொடரவேண்டியது மிக அவசியம் என மனித உரிமைகள் ☞8

## சஜித் தலைமையில் இன்று எதிர்க் கட்சிகள் கூடி ஆராய்வு

தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை கிடைக்கப் பெறாத உள்ளூராட்சி மன்றங்களில் எதிர்க்கட்சிகள் இணைந்து கூட்டணியாக ஆட்சியமைப்பது குறித்து ஆராய்ந்துவருகின்றன. அந்த வகையில்இன்றுசனிக்கிழமை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் எதிர்க்கட்சிகளுக்கிடையில் இடம்பெறவுள்ளது. இந்த சந்திப்பில் ஐக்கிய தேசிய; கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட முக்கிய கட்சிகள் பங்கேற்கவுள்ளன.

கடந்த புதன்கிழமை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், கொழும்பு - பிளவர் வீதியில் அமைந்துள்ள அவரது ☞8

## இனி இது .....

சபைகளில் தமிழ் அரசுக் கட்சி முன்னிலை பெற்-றுள்ள இடங்களில் அந்தக் கட்சி ஆட்சியமைக்க ஆதரவு வழங்குவதானால் 4 சபைகளைத் தமக்குத் தரும்படி ஜனநாயகக் கூட்டணி நிபந்தனை விதித்தது என்றும், இந்தக் கூட்டத்தில் தமிழ் அரசின் தலைவர் சிவஞானம் சீற்றத்தோடு பதிலளித்தார் என்றும் பேச்சை முறிக்கும் வகையில் அவரது பதில் இருந்தது என்ற சாரப்படவும் உடனடியாகச் செய்திகள் பரப்பப்பட்டன. ஆனால் உண்மையில் அப்படியெதுவும் அங்கு நடக்கவில்லை என்று தெரிகிறது.

பேச்சின் நடுவே வலிகாமம் கிழக்கு (கோப்பாய்), வலிகாமம் தெற்கு (மானிப்பாய்), சாவகச்சேரி நகரசபை மற்றும் மாந்தை மேற்கு (நானாட்டான்) ஆகிய சபைகளில் தவிசாளர் பதவிகளை ஜனநாயகக் கூட்டணிக்குத் தரவேண்டும் என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார். இதற்கு முன்னர் சித்தார்த்தனின் வீட்டில் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரனோடு நடந்த சந்திப்பின் பின்னர், அந்தக் கட்சி முன்னிலை பெற்றுள்ள சபைகளில் அது ஆட்சியமைக்க ஜனநாயகக் கூட்டணி ஆதரவளிக்கும் என்று பகிரங்கமாக அறிவித்த பின்னர், நேற்றைய சந்திப்பில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது தமிழ் அரசுக் கட்சியினருக்கு திடீர் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஏனெனில் முதல் சந்திப்பின்போது, தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவளிப்பதில், தமிழ்க் காங்கிரஸிற்கு ஆதரவளிப்பதில் தமக்குக் காரணப்படும் சிக்கல்கள் போன்று எதுவும் இல்லை என்றபோதும் சில கரிசனைகள் இருக்கின்றன, அதுபற்றிப் பின்னர் கூறுகின்றோம் என்றுதான் ஜனநாயகக் கூட்டணியினர் தெரிவித்திருந்தனர். அவர்களின் கரிசனை என்பது சில சபைகளில் தமிழ் அரசுக் கட்சி சில தலைவர்களை நியமிப்பது தொடர்பிலானதாக இருக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

நேற்றைய சந்திப்பில் அதுபோன்ற கரிசனையையும் ஜனநாயகக் கூட்டணியினர் எழுப்பினர். முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒரு சபையில தவிசாளராக வரக்கூடியவர் என்று எதிர்பார்க்கப்படும் ஓர் இளைஞர் ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் கட்சிகளை ஒட்டுக்குழுக்கள் என்று காரசாரமாக விமர்சித்தார் என்றும் அப்படிப்பட்டவருக்குத் தாம் எப்படி ஆதரவு வழங்க முடியும் என்றும் ஜனநாயகக் கூட்டணியினர் நேற்றைய கூட்டத்தில் கரிசனை எழுப்பினர். இது தொடர்பில் வவுனியாவில் நடந்த கூட்டத்திலும் ஏற்கனவே கரிசனை எழுப்பப்பட்டிருந்ததன் அடிப்படையில் தமிழ் அரசுக் கட்சி இந்த விடயத்தைக் கையாள்வதற்கு ஏற்கனவே தயாராக இருந்தது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவர்கள் முன்பாகவே தமிழ் அரசின் தலைவர் குறிப்பிட்ட இளைஞருக்கு தொலைபேசி அழைப்பெடுத்து, அவர்களுடன் சேர்ந்து சபைகளில் ஆட்சியமைக்கவேண்டிய நிலை இருக்கும்போது எப்படி அவர்களை இவ்வாறு விமர்சிக்கலாம் என்று கடிந்துகொண்டார். அதனை அடுத்து தான் அவ்வாறு கருத்துத் தெரிவித்தது தவறுதான் என்று ஏற்றுக்கொண்ட இளைஞர் அதற்காக மன்னிப்பும் கேட்டுக்கொண்டார். பிரச்சினை சுமுகமாக முடிக்கப்பட்டது.

ஜனநாயகக் கூட்டணியினரிடமிருந்து இவ்வாறான கரிசனைகளை எதிர்பார்த்த தமிழ் அரசுக் கட்சியினருக்கு அவர்கள் திடீரென நான்கு சபைகளைத் தமக்குத் தரவேண்டும் என்று விடுத்த கோரிக்கை அதிர்ச்சியைத் தந்தது. இருந்தாலும் அங்கு சமாளிப்புக்கோ, இழுத்தடிப்புக்களுக்கோ இடம் வைக்காமல் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையைக் கூட்டணிக்குத் தரமுடியாது என்று தலைவர் சிவஞானம் திட்டவட்டமாக, சுரேஸின் முகத்திற்கு நேராகவே தெரிவித்துவிட்டார். அதற்காக நியாயமான இரண்டு காரணங்களையும் அவர் முன்வைத்தார்.

முதல் காரணம், வலி. கிழக்கில் தமிழ் அரசுக் கட்சியினருக்கு 11 உறுப்பினர்கள், ஜனநாயகக் கூட்டணியினருக்கு 5 உறுப்பினர்கள் மட்டுமே. இரண்டு மடங்கு உறுப்பினர்களைத் தாம் வைத்திருக்கும் நிலையில் ஆட்சியுரிமையை தருமாறு கோருவது நியாயமற்றது. மற்றையது அங்கு தமது கட்சிக்குள்ளேயே யாரைத் தலைவராக்குவது என்று ஒரு பெரிய களேபரமே ஓடிக்கொண்டிருக்கும் நிலையில், சபையே தமிழ் அரசுக் கட்சிக்கு இல்லை என்றால் கட்சித் தொண்டர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள் என்பது.

நல்லூர் மற்றும் கோப்பாய் ஆகியன தமிழ் அரசுக் கட்சியின் நல்லூர் தொகுதிக்குள் அடங்குகின்றன. நல்லூர் தொகுதியின் தலைவர் சிவஞானமே. அதன் அடிப்படையிலும் அவர் வலி. கிழக்கு சபையை விட்டுக்கொடுக்க முடியாது என்பதை அங்கு திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். அப்படியென்றால் இத்துடன் இந்த விடயம் முடிந்துவிட்டதா, இனிமேல் இதில் பேசுவதற்கு ஒன்றும் இல்லையா என்ற சாரப்பட சுரேஸ் விடயத்தை இழுக்க முயன்றார். ஆனால், வலி. கிழக்கு விடயத்தில் விட்டுக்கொடுக்க முடியாது என்பதை சிவஞானம் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டாலும் மானிப்பாய், சாவகச்சேரி, நானாட்டான் சபைகளின் விவகாரங்கள் தொடர்பில் அந்தந்தச் சபைகளின் உறுப்பினர்களுடனும் கட்சியின் தொகுதிக் கிளையினருடனும் கலந்துபேசிய பின்னர் பதில் தருவார் என்று சுமந்திரன் அப்போதைக்கு அந்தப் பேச்சை சுமுகமாக்கினார்.

இருப்பினும் மானிப்பாய், சாவகச்சேரி சபைகள் தொடர்பில கட்சி உறுப்பினர்களிடம் கட்சிச் செயலாளர் என்று முறையில் சுமந்திரன் கருத்துக்கேட்டபோது அதனை விட்டுக்கொடுப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை என்றும் அறியவந்தது. தமிழ் அரசுக் கட்சி முன்னிலை பெற்ற சபைகளில் தாமே ஆட்சியமைப்பது என்று கட்சியின் அரசியல் குழு ஏற்கனவே முடிவு செய்திருக்கும் நிலையில், தமது சபைகளை மட்டும் எப்படி மற்றையவர்களுக்கு விட்டுக்கொடுக்க கட்சி இடமளிக்கமுடியும் என்ற வகையில் அவர்கள் போர்க்கொடி தூக்கினர் என்றும் கட்சி அத்தகைய முடிவெடுக்கத் தாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்று தெரிவித்தார்கள் என்றும் அறியமுடிந்தது.

இந்தப் பிரச்சினையால் நேற்றைய பேச்சுக்களின்போது சுமூகமற்ற நிலமை எதுவும் ஏற்படவில்லை என்பதையும் திட்டவட்டமாக அறிய முடிந்தது. ஏனெனில் 4 சபைகளைத் தமக்குத் தருமாறு ஜனநாயகக் கூட்டணியினர் விடுத்த கோரிக்கை ஒரு நிபந்தனையாக இறுக்கமாக முன்வைக்கப்படவில்லை. நல்லெண்ண அடிப்படையில் அவற்றைத் தாருங்கள் என்று அவர்கள் கேட்டார்கள். அதில் ஒரு சபையைத் தரமுடியாது என்று அவர்களுக்கு உடனேயே பதில் சொல்லப்பட்டது என்பதைத் தாண்டி, 4 சபைகளையும் தந்தால்தான் மற்றைய சபைகளில் தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவு என்ற நிபந்தனையாக அவர்களும் இந்தக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. அதையொட்டியதாக பேச்சும் நடக்கவில்லை. அதேநேரம், கடந்தமுறை தன்னுடன் நடந்த பேச்சின்போது இவ்வாறான கோரிக்கை எதுவும் இருக்கவில்லை என்பதையும் முன்னிலை பெற்ற கட்சிக்கு ஆதரவளிப்பது என்ற அடிப்படையிலேயே ஜனநாயகக் கூட்டணியின் முடிவு இருந்தது என்பதையும் அங்கு சுட்டிக்காட்ட சுமந்திரனும் தவறியிருக்கவில்லை.

இந்தப் பேச்சின் நடுவே, வலி. கிழக்கைத் தரமுடியாது என்று சிவஞானம் தெரிவித்ததும், அப்படியானால் பேச்சு இத்துடன் முடிந்ததா என்று சுரேஸ் கேட்டார் என்றும் அது உங்கள் கைகளில்தான் உள்ளது என்று கேட்டுவிட்டு சிவஞானம் புறப்பட்டுச் சென்றார் என்றும் வட்ஸ்அப்களில் பரவிய செய்திகள்போன்று எதுவும் நடக்கவில்லை என்பதும், இதற்குப் பின்னரும் பல விடயங்கள் தொடர்ந்தும் பேசப்பட்டன என்பதுமே உண்மை விடயங்கள். பேச்சு முடிந்து இரு தரப்பினரும் சுமுகமாகவே விடைபெற்றனர் என்பதும் குறிப்பிடப்படவேண்டியவை.

குறிப்பாக, தமிழ் அரசுக் கட்சிக்கு ஆதரவளிப்பது தொடர்பில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவேண்டும் என்பதும் ஜனநாயகக் கூட்டணியினரால் அங்கு வலியுறுத்தப்பட்டது. 4 சபைகளின் விவகாரம் பேசப்பட்ட பின்னரே அது குறித்தும் ஆராயப்பட்டது. உள்ளூராட்சி சபைகளில் உபகுழுக்கள் நியமிக்கப்படும்போது எந்த அடிப்படையில் உறுப்பினர்களை நியமிப்பது என்பது உள்ளிட்ட விடயங்களை விவரமாகக் குறிப்பிட்ட இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்படவேண்டும் என்பதாக அவர்களின் வலியுறுத்தல் அமைந்தது. இதற்கு தமிழ் அரசுக் கட்சி மறுப்பேதும் சொல்லவில்லை. ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளுமளவிற்கு இதிலென்ன விடயங்கள் இருக்கின்றன என்று அவர்கள் பின்னர் தமக்கிடையில் பேசிக்கொண்டனர் என்றும் அறியமுடிந்தது.

இப்படி பேச்சு எடுத்தேன் கவிழ்த்தேன் என்றோ, முறிபட்டுப் போகும் வகையிலோ நடந்து முடியவில்லை. எதையோ கட்டி மலையை இழு, வந்தால் மலை போனால் அது என்று சொல்லப்படுவதைப்போன்று ஜனநாயகக் கூட்டணியினர் 4 சபைக் கோரிக்கை ஒன்றை முன்வைத்துப் பார்த்தனர் என்பதைத் தாண்டி அங்கு பிரச்சினைக்குரியதாக எந்தவொரு விடயங்களும் திசை திரும்பியதாகத் தெரியவில்லை. ஆனாலும், எடுத்த எடுப்பிலேயே வலி. கிழக்கைத் தரமுடியாது என்று சிவஞானம் மறுத்ததால் ஏற்பட்ட ஏமாற்றம் அல்லது விரக்தி காரணமாக கூட்டணியினர் வெளியே வந்ததும் சிவஞானம் ஏதோ இந்த அரசியல் ஒற்றுமையைக் குலைக்கப் பார்க்கிறார் என்ற வகையில் கதைகள் பரவத் தொடங்கின.

இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தபோதிருந்தே அவர்கள் கையாண்டுவந்த பழைய உத்திதான். இப்போதும் அது பயனுள்ளதாக அமையும் என்று நினைக்கிறார்களா என்று நினைக்கும்போது வேடிக்கையாக இருக்கின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உலகையே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கின் கரையோரப் பிரதேசங்களில் வாழுகின்ற மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டும், பல தடைவைகள் இடம்பெயர்ந்த காரணத்தாலும் தமது காணிகளுக்கான ஆவணங்களை இழந்துள்ளனர். சிலர் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இந்நிலையில் அவர்களது காணிகளை அரசுடமையாக்கும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

காணிகளை அரசுடமையாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் பழமையான இந்தச் சட்டம் பிரயோகிக்கப்படக்கூடாது. இந்த வர்த்தமானி அறிவித்தல் உடனடியாக மீளப் பெறவேண்டும் என்று நாங்கள் கூறி இருக்கின்றோம். அப்படி மே மாதம் 28க்கு முதல் அது மீளப்பெறாவிட்டால், நாங்கள் பெரும் போராட்டத்தை அரசுக்கு எதிராக நடத்துவோம் என்று ஏற்கனவே அறிவித்திருக்கின்றோம்.

மே 29 இந்தப் போராட்டம் தொடங்கப்படும். இது நான் ஏற்கனவே கூறியதைப் போல் ஒரு கட்சிசார்ந்த நடவடிக்கை என்று எவரும் கருதக் கூடாது. இது எங்களுடைய இருப்பின் மிக முக்கிய கூறாகிய நிலத்தைப் பற்றிய விடயம். நிலம் இருந்தால்தான் இனம் தொடர்ந்து இருக்கலாம். ஆகையினால் இது சகலராலும் ஆதரிக்கப்பட வேண்டிய போராட்டம். சகல அரசியல் கட்சிகளுக்கும் நான் அன்பாக விடுக்கின்ற ஒரு வேண்டுகோள், இதில் இணைந்துகொள்ளுங்கள்.

இதனை எனது கட்சி நடத்துகின்ற போராட்டமாகக் கருதாமல் நாங்கள் அனைவரும் இணைந்து செய்கின்ற போராட்டமாக இருக்கவேண்டும். பொது அமைப்புக்கள், மக்கள், விசேடமாக பாதிக்கப்பட்ட மக்கள் இதில் இணைந்துகொள்ளவேண்டும். ஆகவே, அரசுக்குக் கொடுக்கப்பட்ட காலக்கெடு இந்த மாதம் 28 நிறைவடைகின்றது. ஆகவே, எதிர்வரும் 29 போராட்டம் நடத்துவதற்கான ஆயத்தங்களை நாங்கள் செய்கின்றோம். இது இந்த நாட்டை மட்டுமல்ல உலகத்தையே உலுக்கக்கூடிய ஒரு போராட்டமாக இருக்கவேண்டும். ஏனென்றால் இங்கே அரசு இப்போது செய்ய நினைத்திருப்பது மிக மிகப் பெரும் விடயம். இது எவ்வளவு பாரதூரமானது என்பதை உணர்ந்து சகலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும் என்று மீண்டும் மீண்டும் நான் அன்பாகக் கோரிக்கை விடுக்கின்றேன் -- என்றார்.

## ஆயுதமேந்தி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட அவர், நிறைவேற்றதிகாரமும் தம்மிடமே இருக்கிறது என்று மிக மோசமானதொரு எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவோம் என்பதுதான் தேசிய மக்கள் சக்தியின் தாரக மந்திரமாக இருந்தது. ஆனால் தற்போது அக்கட்சியைப் பிரதிநித்துவப்படுத்தும் அநுரகுமாரதிஸநாயக்க ஜனாதிபதி நாற்காலியில் அமர்ந்தவுடன், அந்த நிறைவேற்றதிகாரத்தைக் காண்பித்து பிறரை எச்சரிக்கிறார். ஜனாதிபதியின் இந்த மிரட்டலுக்கு நாம் அஞ்சப்போவதில்லை. நாம் ஜனநாயகவாதிகள். எனவே நாம் மக்களின் தீர்ப்புக்கு மதிப்பளித்து செயற்படுவோம். அதேபோன்று ஜனாதிபதியும் மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்கவேண்டும். மாறாக மக்கள் விடுதலை முன்னணியாக அவர்கள் ஆயுதமேந்தி செயற்பட்ட காலத்துக்கு மீளத்திரும்பக்கூடாது.

## பட்டதாரிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

சுகாதார அமைச்சால் ஏப்ரல் 27 சுகாதார ஊழியர் பயிற்சி ஆட்சேர்ப்புக்காக திறன்காண் போட்டி பரீட்சை நடத்தப்பட்டதுடன், குறித்த பரீட்சையில் பங்கெடுக்க தனியார் பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கு மாத்திரம் வாய்ப்பு வழங்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஒன்றிணைந்த சுகாதார மற்றும் விஞ்ஞானப் பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கு முன்பாக நண்பகல் 12 மணியளவில் ஒன்றுகூடிய நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் பெரும் குரலில் ஆளும்தரப்பின் நடவடிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தேசிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் செயல்படும் அரச பல்கலைக்கழக பட்டதாரிகளையும் இலவச கல்வியையும் உதாசினப்படுத்தும் வகையில் தற்போதைய சுகாதார அமைச்சர் செயற்படுகிறார், அரச மருந்தக சேவைக்கு பட்டதாரிகளை உடனடியாக இணைத்துக் கொள்ளவேண்டும், இலவச கல்வி பாதுகாக்கப்படவேண்டும், காலம் தாமதித்ததுபோதும் உரிய முறையில் ஆட்சேர்ப்புக்கான கொள்கைகள் வெளியிடப்பட வேண்டும், ஒன்றிணைந்த சுகாதார மற்றும் விஞ்ஞானப் பட்டதாரிகளை அரச சேவையில் பணியமர்த்துவதற்கான நடைமுறைச் சாத்தியமான வேலைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் ஆகிய வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும் ஆர்ப்பாட்டகாரர்கள் தாய்கியிருந்தனர்.

மேலும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சரின் புகைப்படத்துடன் கூடிய வெருளி ஒன்றையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட்டு எரித்தனர். இந்நிலையில் பாதுகாப்புக் கருதி சுகாதார அமைச்சுக்கு முன்பாக பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். போராட்டம் தொடர்பில் மருதானை பொலிஸார் மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்திய நிலையில், நீதிமன்றம் குறித்த ஆர்ப்பாட்டத்திற்குத் தடைவிதித்தது.

வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00 மணி வரை, மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருத்துவமனை சதுக்கம், டீன்ஸ் வீதி, சேரம் வீதி மற்றும் ரீஜண்ட் வீதி ஆகியவற்றைச் சுற்றியுள்ள வீதிகளை மறித்தோ, சுகாதார அமைச்சு மற்றும் மருத்துவமனையின் நுழைவாயிலுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலோ ஆர்ப்பாட்டம் மற்றும்

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமசந்திரன், சித்தார்த்தன், மற்றும் வேந்தன் ஆகியோரும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் செல்வராஜா கஜேந்திரன், காண்டீபன் மற்றும் தீபன் திலீஷன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

அதன்படி உள்ளூராட்சி மன்றங்களில் இணைந்து பயணிப்பதற்கான சாத்தியப்பாடு குறித்து அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பிரதிநிதிகள், இணைந்து பயணிப்பதில் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும், இருப்பினும் தமது இரு கட்சிகளும் இணையும் பட்சத்தில் ஒரு சில உள்ளூராட்சி சபைகளில் மாத்திரமே ஆட்சி அமைக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டினர்.

அதனையடுத்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமது கட்சி ஆகிய மூன்றும் இணைந்து ஆட்சி அமைப்பதற்கான சாத்தியம் குறித்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு உலகில் முதல் கருங்கல் சிலை திறப்பு

## மட்.கல்லடிப் பாலத்தில் இன்று கோலாகலம்

(சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு உலகில் 15 அடி உயர முதல் கருங்கல் சிலை இன்று (சனிக்கிழமை) மாலை 4.30 மணிக்கு மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் திறந்து வைக்கப்படுகிறது.

அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையின் பூரண ஏற்பாட்டில், மட்டக்களப்பு கல்லடிப்பாலத்தில், இந்திய மாமல்லபுரத்தில் செதுக்கிய கருங்கல்லாலான சுவாமி விபுலானந்த அடிகளாரின் திரு உருவச்சிலை நிறுவப்படுகிறது.

மட்டக்களப்புகல்லடி உப்போடை இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ முன்னிலையில் சுப வேளையில் கடந்த ஜனவரியில் அடிக்கல் நடும் நிகழ்வு சிறப்பாக இடம் பெற்றமை தெரிந்ததே.

அடிகளாரின் சிலையானது தனி ஒரு கருங்கல்லால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவில் மாமல்லபுரத்தில் திறமை வாய்ந்த தமிழ் நாட்டு சிற்பிகளால் செதுக்கப்பட்டது .

அடிகளாரின் சிலை அமைப்பு செயற்குழுவின் தலைவரான மட்டக்களப்பின் பிரபல வர்த்தகரான தேசபந்து முத்துக்குமார் செல்வராஜா தலைமையில் சிலையமைப்பு பணிகள் நடைபெற்று இன்று அவர் தலைமையில் சிலைதிறப்பு விழா நடைபெறுகிறது.

இன்று முழுநாள் விழாவும் மட்டக்களப்பு நூற்றாண்டு விழாச் சபைத்தலைவர் கே. பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது .

இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மகராஜ் சிலையைத் திறந்து வைக்கிறார்.

உலகில், சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு தனிக் கருங்கல்லில் சிலை எழுப்பப்படுவதும், கல்லடிப்பாலத்தோடு நெருங்கிய தொடர்பு வரலாறுடைய மண்ணின் மைந்தர் சுவாமிக்கு கல்லடிப் பாலத்தில் சிலை எழுப்பப்படுவதும் இதுவே முதல் தடவையாகும்.

இது தொடர்பாக- மட்டக்களப்பு விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையின் தலைவர் க.பாஸ்கரன் தெரிவிக்கையில் -

முத்தமிழ் வித்தகரும் உலகில் முதலாவது தமிழ்ப் பேராசிரியருமான சுவாமி விபுலானந்தருக்கு 15 அடி உயரமான கற்சிலை இன்று 17ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட இருக்கிறது.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் மகர யாழை ஆய்வு செய்து அதற்கு உருவம் கொடுத்து உலகிற்கு தந்தவர் .அவரால் மகரயாழ் இன்றும் உயிர் வாழ்கிறது.

அது மட்டும் இன்றி உலகில் முதலாவது தமிழ் பேராசிரியராக பதவி பெற்று தமிழ் மொழிக்கும் இனத்திற்கும் நன்கு சேவையாற்றியவர். குறிப்பாக தமிழர்களின் மத்தியில் இருக்கின்ற குல சாதி மத வர்க்க பேதங்களை அறவே ஒழிக்க பாடுபட்டவர் .இதற்கு மேலாக ஆன்மீகத்தில் துறவியாகி ஆன்மீக ஞானத்தை வழங்குவதில் அவர் காட்டிய உற்சாகம், வழிவகைகள் அளப்பெரியன. இப்படியான ஒரு மகான் வாழ்நாளில் மறக்க முடியாதவர். அவரின் ஞாபகார்த்தமாக 15 அடி உயரமான கற்சிலையை கல்லடி பாலத்திற்கு அருகில் திறந்து வைப்பதில் விபுலானந்தரின் நூற்றாண்டு விழா சபை மிகவும் சந்தோசம் அடைகிறதென்றார்.

சிலை நிர்மாணக் குழு தலைவர் தேசபந்து



முத்துக்குமார் செல்வராசா, சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையின் பொதுச் செயலாளர் ச.ஜெயராஜா ஆகியோரும் கருத்து கூறினர்.

# பௌஸர் விபத்து; கசிந்த எரிபொருள் நீரில் கலப்பு

## குடிதண்ணீருக்கு தவிக்கும் மக்கள்!

நானுஓயாவில்எரிபொருள்பௌஸர்விபத்துக்குள்ளானதால்,அவ்வாகனத்தில எரிபொருள் கசிவு ஏற்பட்டு, நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிமிட்டிய, சமர்செட், நானுஓயா ஆகிய கிராமசேவகர் பிரிவுகளின் கீழ் இயங்கும் தம்பகஷ்த்தலாவ, கிளாரண்டன் கீழ் பிரிவு, சமர்செட் லேங்டெல், கிரிமிட்டி கீழ் பிரிவு போன்ற தோட்டங்களில் தோட்ட மக்கள் பயன்படுத்தும் குடிதண்ணீரில் எரிபொருள் கலந்ததனால், அந்நீரை பயன்படுத்த முடியாமல் புதன்கிழமை இரவு முதல் இன்று வரை பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நுவரெலியா – ஹற்றன் பிரதான வீதியில் நானுஓயா கிளாரண்டன் பகுதியில் டீசல் மற்றும் பெற்றோல் ஏற்றிச் சென்ற எரிபொருள் பௌசர் புதன்கிழமை மாலை கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதிகமான எரிபொருள் கசிவு ஏற்பட்டு, அருகில் இருந்த நீரோடையில் எரிபொருள் கலந்தது.

இதன் காரணமாக தம்பகஷ்த்தலாவ, கிளாரண்டன் கீழ் பிரிவு, சமர்செட் லேங்டெல் , கிரிமிட்டி கீழ் பிரிவு ஆகிய தோட்டங்களுக்கான நீரை பகிரும் நீர்த்தொட்டியில் அதிக அளவு எரிபொருள் நீரில் கலந்திருக்க வாய்ப்புள்ளதால் அந்த நீர்த்தொட்டியில் இருந்து வெளியேறும் நீரினை பயன்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், நீர்த்தொட்டியில் இருந்து நீர் வெளியேறுவதற்கான குடிநீர்க் குழாய்கள் முழுவதும் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், அந்த பகுதியில் வசிப்பவர்களுக்கு தற்போது தேவைக்கேற்ப தோட்ட நிர்வாகத்தினர் மூலமாக வெளிப் பிரதேசங்களில் இருந்து சுத்தமான குடிநீர் பௌசர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

எவ்வாறாயினும், அப்பகுதியில் வசிப்பவர்களுக்கு வழங்கப்படும் நீர் போதுமானதாக இல்லை எனவும் அந்த நீரை குடிப்பதற்கு மாத்திரம் பயன்படுத்த முடிகிறது; தங்களின் வேறு தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முடியாதுள்ளது எனவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் விபத்து இடம்பெற்ற நாளன்று இரவு வேளையில் பெய்த பலத்த மழை காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் அதிகளவு எரிபொருள் கலந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக நுவரெலியா மாவட்ட செயலாளரின் உத்தரவின் பேரில் உரிய பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் எரிபொருள் கலந்துள்ளதா என நீர் மாதிரிகளை சேகரித்து பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள்





ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா–ஹற்றன் பிரதான வீதியில் விபத்து ஏற்பட்ட இடத்தில் அதிக எரிபொருள் கசிந்ததால், அவ்வீதி வழுக்கும் தன்மையில் காணப்படுகிறது. இதனால் அந்த வீதியூடாக பயணிக்கும் வாகன சாரதிகள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு நானுஓயா பொலிஸார் கேட்டுக்கொள்கின்றனர்.–

# கற்பிட்டி பிரதேச சபையை பிடிக்கும் முனைப்பில் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி

(சியாஜ்)

கற்பிட்டி பிரதேசசபைக்கு 32 உறுப்பினர்கள் இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் எந்த ஒரு தனிக் கட்சியாலும் ஆட்சி அமைக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய இரு கட்சிகளும் தலா 10 ஆசனங்களை பெற்றுள்ள நிலையில் ஏனைய சிறு கட்சிகளின் ஆசனங்கள் சமமாக கூட்டு சேரும் பட்சத்தில் 16 இற்கு 16 என்ற அடிப்படையில் சமனாக காணப்படும் நிலையில் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவுகள் திருவுல சீட்டு அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதன்படி தேசிய மக்கள் சக்தி 08 வட்டாரங்களில் வெற்றி பெற்று இரு இரட்டை உறுப்பினர் வட்டாரங்கள் உள்ளடங்களாக( 16 709 வாக்குகள்) 10 உறுப்பினர்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 06 வட்டாரங்களில் வெற்றி பெற்று ( 18 114 வாக்குகள்) 04 போனஸ் உறுப்பினர்களுடன் 10 உறுப்பினர்களையும் இலங்கை பொதுஜன பெரமுன ஒரு வட்டாரத்தில் வெற்றி பெற்று 02 போனஸ் உறுப்பினர்களுடன் (4 807 வாக்குகள்) 03 உறுப்பினர்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இரண்டு வட்டாரங்களில் வெற்றி பெற்று ( 4 161 வாக்குகள்) 02 உறுப்பினர்களையும் பொதுஜன ஐக்கிய முன்னணி ( 2 527 வாக்குகள்) 02 போனஸ் உறுப்பினர்களையும் சர்வஜன அதிகாரம் ( 3 003 வாக்குகள்) 02 போனஸ் உறுப்பினர்களையும் ஐக்கிய தேசிய கட்சி ( 1 939 வாக்குகள்) 01 போனஸ் உறுப்பினரையும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ( 1 443 வாக்குகள்) 01 போனஸ் உறுப்பினரையும் சுயேச்சை குழு ( 2 011 வாக்குகள்) 01 போனஸ் உறுப்பினரையும் பெற்றுள்ளன.

இவ்வாறான நிலையில் தேசிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஆட்சியமைக்கும் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுவரும் நிலையில் மக்களின் எதிர்பார்ப்பு ஆளும் அரசதரப்பினர் ஆட்சி அமைக்கப்பட வேண்டும் என்ற நிலையே காணப்படுகிறது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அபிவிருத்தி நிதி என்பது அரசியலுக்கு அப்பாற்பட்டது

இலங்கையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிந்துவிட்ட சூழலிலும், தேசிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்கள் தெரிவித்து சில கருத்துக்கள், நாட்டின் ஜனநாயக அடித்தளங்களைப் பெரிதும் சவாலுக்கு உட்படுத்துகின்றன. அண்மையில், தேசிய மக்கள் சக்தியின் சபை முதல்வரும், ஆளும்கட்சி வடக்கு மாகாண ஒருங்கிணைப்பாளருமான பிமல் ரத்நாயக்க, 'தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்காத உள்ளூராட்சி சபைகளுக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிதி வழங்கப்படமாட்டாது' எனத் தொரிவித்துள்ளார். அவரது கட்சியின் தலைவர் மற்றும் தற்போதைய அரசுத் தலைவரான அநுரகுமார திசாநாயக்கவும், தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் இதனை பலமுறை வலியுறுத்தியுள்ளார்.

இந்தப் பொருளடக்கம் பெரும் சிந்தனையைத் தூண்டுகிறது. ஒரு ஜனநாயகக் கட்டமைப்பில், அபிவிருத்தி நிதிகள் என்பது மக்கள் வசிக்கும் பிரதேசங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு வழங்கப்பட வேண்டிய பொதுச் சொத்தா? அல்லது ஆளும் கட்சியின் உரித்தா? நிதியை ஒதுக்குவது அந்தப் பகுதிகளில் ஆட்சி அமைத்திருக்கும் கட்சிக்கல்ல. அங்குள்ள மக்களுக்காக. முறைகேடுகள் நடக்கும் எனில் அவற்றைக் கண்காணித்து நெறிப்படுத்துவதுதான் ஓர் ஆளும்தரப்பின் தலையாக கடமை. அதைவிடுத்து நிதியை ஒதுக்கமாட்டேன் என்று சொல்வது ஆளும்தரப்பின் கையாலாகாத்தனம்.

மக்கள் வாரக்களித் தேர்ந்தெடுத்திருந்தாலும், அவர்கள் கட்சி அரசியலுக்கு இணங்கவில்லை என்ற காரணத்தால் அபிவிருத்தி வாய்ப்புகளிலிருந்து விலக்கப்படுகிறார்கள் என்றால், அது முற்றிலும் ஜனநாயகமற்ற செயல்.

பிமல் ரத்நாயக்க மற்றும் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோரின் இந்தக் கருத்துகள், 'வஞ்சக வாக்குறுதிகள்', 'அதிர்ச்சி உத்திகள்' என மட்டுமல்லாமல், ஆட்சி பொறுப்பை தனியார்மயமாக அணுகும் ஆபத்தான மனப்பாங்கினையும் வெளிப்படுத்துகின்றன. இது, மக்கள் வாக்களிக்கும்சுதந்திரத்தைஒடுக்கும்சூழலைஉருவாக்கக்கூடியது. 'நாங்கள் ஆட்சி அமைத்தால் மட்டுமே உங்களுக்கு நிதி, இல்லையெனில் கிடையாது' என்ற கட்டாயம் என்பது சுயநல அடிப்படையில் மக்களை பதற்றப்படுத்தும் முயற்சி.

தேசிய மக்கள் சக்தி ஒரு மாற்றுவழி அரசியலுக்காகவே உருவானது என்று பெரும்பாலானோர் நம்பியிருந்தார்கள். கடந்த ஆட்சியமைப்புக்கள் செய்துகொண்ட பிழைகளை மீளாதவையாகவே சுட்டிக்காட்டிய அந்தக் கட்சியின் தற்போதைய செயற்பாடுகள், அவர்கள் பழைய வட்டத்தில் சிக்கிக்கொண்டிருப்பதையே புலப்படுத்துகின்றன.

நிதியொதுக்கீடு என்பது ஒரே நேரத்தில் பல பாதைகளை உருவாக்கும். குறிப்பாக, சமூகநலவாளர்களுக்கு வேலை வாய்ப்புகள், மக்களுக்கான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி மற்றும் சுகாதார மேம்பாடுகள் போன்றவை இதனுடன் நேரடியாகப் பிணைந்துள்ளன. இவையெல்லாம் ஆளும் தரப்பை ஆதரிக்காதவர்களுக்கு வழங்கப்படக்கூடாது என முடிவெடுப்பது, சட்ட அரசின் அடிப்படைத் தத்துவங்களையே கேள்விக்குள்ளாக்குகிறது. எனவே, அரசியல் எதிரிகள் ஆட்சி அமைத்துள்ளஉள்ளூராட்சிகளைபுறக்கணிப்பதோடு,மக்களையும் தண்டிப்பது போன்ற எண்ணங்களை அத்தாட்சிப்படுத்தும் இவ்வகை அரசியல் உத்திகள், மாறுவழிக் கொள்கைகளுக்கே பெரிய கேடு.

தேசியமக்கள்சக்தியின்தலைவர்கள்தங்களதுகருத்துக்களில் இருந்து பின்னடைவதோடு, ஜனநாயகச் சூழலுக்கே உரிய நம்பிக்கையையும் மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகிறது. அரசியல் வெற்றி என்பது மக்களிடம் நம்பிக்கையைப் பெருக்குவதிலேயே நிலைநிறுத்தப்படவேண்டும், பதற்றமூட்டல் மூலம் மவுசு குவிப்பதிலல்ல. ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்தை ஏற்படுத்த வந்தவர்கள், பழைய ஆட்சியாளர்களைப் போலவே மக்களைப் பிளக்கும் எண்ணத்தை வளர்த்தால், மாற்றம் என்பதற்கான அர்த்தமே அழிகிறது. இதைத் தேசிய மக்கள் சக்தி நன்கு உணர வேண்டிய தருணம் இது.

## இறக்காமத்தில் சுற்றுலா நீதிமன்றம் ஸ்தாபிக்க நடவடிக்கை வேண்டும்

### அஷ்ரப் தாஹிர் எம்.பி வலியுறுத்து

(அபு அலா)

இறக்காமம் பிரதேச மக்களின் நீண்டநாள் எதிர்பார்ப்பாகக் கருதப்படும் நீதிமன்ற நடவடிக்களை இலகுபடுத்துவதற்கான கோரிக்கையினை அடிப்படையாகக் கொண்டு, சுற்றுலா நீதிமன்றம் ஒன்றை இப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் வலியுறுத்தினார்.

இறக்காமம் பிரதேச செயலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

இறக்காமம் பிரதேச மக்கள் அம்பாறை நீதிமன்றத்திலேயே தற்போதைய வழக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் இம்மக்கள் மொழி மற்றும் பயணத்திற்கான சிரமங்களை எதிர்கொண்டு பல அசௌகரியங்களுக்கு உட்பட்டு வருகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



நீதிமன்ற நடவடிக்கைகள் எளிதாகக் கிடைக்கும் வகையில், குறைந்தபட்சம் ஒரு சுற்றுலா நீதிமன்றத்தை இறக்காமத்தில் ஸ்தாபிப்பது அல்லது அக்கரைப்பற்று நீதிமன்றத்துடனாவது இவர்களின் நீதிமன்ற நடவடிக்களை இணக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் அவர் எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.

## மகிழ்ச்சிப் பெருவிழா

(ஹமீட்)

நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அட்டாளைச்சேனை ஜும்ஆ பள்ளி வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அல்ஹாஜ் ஏ.எல்.பாயிஸ் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட வாக்குகளால் வளப்படுத்தியவர்களுக்கு வாத்சல்ய நன்றி கூறும் மகிழ்ச்சிப் பெருவிழாவும், துஆப் பிரார்த்தனையும் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை அவர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சூரா சபைச் செயலாளர் யூ.எல்.வாஹித்(□□□. □□□) கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.சி.சமால்தீன், பிரதேச சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற கௌரவ உறுப்பினர்களான ஐ.எல்.அஸ்வர் சாலிஹ், ஏ.எஸ்.எம்.உவைஸ், ஏ.சி.நியாஸ், ஏ.கே.அமீர்(தொழிலதிபர்), பட்டியல் வேட்பாளர்கள், கட்சியின் கிளைக்குழுத் தலைவர்கள், செயலாளர்கள், உலமாக்கள், கட்சியின் மத்திய குழு





உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள், கட்சியின் போராளிகள், பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## திருமலை எம்.பி. குகதாசனால் மாணவர்களுக்கான உதவிகள்

(ஹஸ்பர்)

திருகோணமலை அன்புவெளி புரத்தில் உள்ள ஞானசேகரம் முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கான வங்கி சேமிப்பு புத்தகமும் பாடசாலை பையும் நேற்று (வெள்ளிக்கிழமை) வழங்கி வைக்கப்பட்டன.

இதில்பிரதமஅதிதியாகதிருகோணமலை மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்கதிரவேலு சண்முகம் குகதாசன் கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

இதன் போது இலங்கை வங்கியின் உத்தியோகத்தர்கள்,பெற்றார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போதுஉரையாற்றியநாடாளுமன்ற உறுப்பினர் ச.குகதாசன் –



ஜப்பான் நாட்டவர் தங்களது வருமானத்தில் 25வீதத்தை சேமித்து வருகின்றனர். இது போன்று பிள்ளைகளின் பெயரில் சேமிக்க வேண்டும்.எனது தந்தையின் பெயரில் அரசியல் செய்ய வேண்டும் என்ற நோக்கில் சேமித்த பணம் 50 லட்சத்தை தாண்டியுள்ளது. கல்விதான் சிறந்த மூலதனம் கல்வி என்பது அழியாத செல்வம் .பிள்ளைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதுடன் கல்வியை பற்றி நாற்பது குரல்களில் வள்ளுவர் கூறியுள்ளார். எனவே எதிர்காலத்திலும் கல்விக்காக என்னாலான முன்னெடுப்புக்களை எடுத்துச் செல்வேன். – என்றார்.

# மன்னாரில் கனிய மணல் அகழ்வு தொடர்பில் தீர்மானிக்கும் முக்கியமான கலந்துரையாடல்

## மக்கள் கடும் எதிர்ப்பு

மன்னாரில் கரையோர பகுதிகளில் கனிய மணல் அகழ்வுக்கு மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் மன்னார் தீவுப் பகுதியில் கனிய மணல் அகழ்வு முன்னெடுப்பது தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை சௌத்பார் மன்னார் பகுதியில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவி பணிப்பாளர் ரமேஷ் கண்ணா தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் கனிய மணல் அகழ்வை முன்னெடுக்கும் நிறுவனத்தின் பிரதிநிதிகள், அப்பிரதேசத்தில் உள்ள மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அப்பகுதி மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல் திடீரென ஏற்பாடு செய்யப்பட்டமை தொடர்பாக தமது விசனத்தை தெரிவித்ததோடு, பிரதேச மக்களின் முழுமையான சம்மதம் இன்றி அந்த பிரதேசத்தில் எவ்வித நடவடிக்கையையும் முன்னெடுக்க தாம் அனுமதிக்க மாட்டோம் என இந்த கூட்டத்தில் முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர்.

அதனை தொடர்ந்து, கூட்டத்தில் கலந்துகொண்ட பலர் கணிய மணல் அகழ்வுக்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்ததால் கூட்டம் தீர்மானமின்றி நிறைவடைந்துள்ளது.

இக்கலந்துரையாடலில் ஈடுபட்ட பிரதேச மக்கள் தெரிவிக்கையில் -

கனிய மணல் அகழ்வுக்கு மக்களின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காகவே இந்த கலந்துரையாடல் திடீரென ஏற்பாடு செய்யப்பட்டது.

மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதாகவும் மக்களின் கஷ்டங்களை போக்குவதாகவும் அவர்கள் கூறி மக்களை மயக்கி அனுமதி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றனர். கனிய மணல் அகழ்வுப் பணிகள் செயற்படுத்தப்பட்டால் இக்கிராமம் முழுமையாக பாதிக்கப்படும்.

எமது கிராமத்தின் கரையோர பகுதியில் கனிய மணல் அகழ்வுக்காக எங்களிடம் அனுமதி கேட்கின்றனர்.



அனுமதிவழங்கினால்மக்கள் இங்கே வாழ முடியாத நிலை ஏற்படும். இதனால் நாங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அதனால்தான் இப்பகுதியில் கணிய மணல் அகழ்வுக்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறோம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.









காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர் இனப்படுகொலையின்போது இடம்பெற்ற கொடூரங்கள் மீள இடம்பெறாததை உறுதிசெய்க

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் டொன் டேவிஸ் வலியுறுத்து



தமிழர்இனப்படுகொலையின்போதுஇடம்பெற்ற கொடூரங்கள் மீண்டும் இடம்பெறாததை உறுதி செய்யவேண்டும்என அமெரிக்ககாங்கிரஸ்உறுப்பினர் டொன் டேவிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இலங்கையில் தமிழர் இனப்படுகொலையின் 16 வருடத்தினை நான் நினைவுகூருவதற்காக நான் உரையாற்றுகின்றேன்.

,இன்றும் என்றும் நாங்கள் ஈழத்தமிழர்கள் சமூகத்தினர் ,உயிர்பிழைத்தவர்கள்,அவர்களுடைய குடும்பத்தவர்கள் ,தொடரும்; ஒடுக்குமுறைகளினை எதிர்கொண்டுள்ளவர்களுடன் ஐக்கியமாக இருக்கின்றோம்.

இலங்கை அரசாங்கத்திடமிருந்து அவர்கள் தங்கள் துயரங்களிற்கு நீதியை கோரும் வேளை நாங்கள் தமிழ் மக்கள் குறித்தும் அவர்கள் அனுபவித்த விடயங்கள் குறித்தும்கவனம் செலுத்தவேண்டும்.

அனைவரினது உரிமைகளையும் கௌரவத்தையும் மதிக்கும் அமைதி தீர்விற்காக நாங்கள் பரப்புரை செய்யவேண்டும்,

தமிழர்இனப்படுகொலையின்போதுஇடம்பெற்ற அட்டூழியங்கள் மீண்டும் இடம்பெறாததை உறுதி செய்யவேண்டும்.

மிகமோசமானதுன்பத்தின்மத்தியில்தமிழ்சமூகம் வெளிப்படுத்திய மீள் எழுச்சிதன்மை நீதிக்கான அவர்களின் உறுதிப்பாடு அசைக்க முடியாத உணர்வு ஆகியவற்றி;ற்கான வெளிப்பாடாகும்.

நாங்கள் அனைவரும் ஈழத்தமிழர்களிற்கு ஆதரவாக இருப்போம். - என்றார்.

# முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி வவுனியாவைச் சென்றடைந்தது

முள்ளிவாய்க்கால்நினைவேந்தல் வாரத்தில்தமிழினப்படுகொலையில் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும் ஊர்தி பவனி வெள்ளிக்கிழமை வவுனியாவை வந்தடைந்தது.



யாழ்ப்பாணம் நல்லூர் தியாக தீபம்திலீபனின் நினைவிடத்துக்கு முன்பாக வியாழக்கிழமை ஆரம்ப மான குறித்த ஊர்தி பவனி ஓமந்தை ஊடாக வவுனியா நகரை வந்தடைந்தது.

வவுனியாவில் நகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்குதமிழ் தூபியில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.



அதனை தொடர்ந்து நகரவீதியூடாக தினச்சந்தையை அடைந்தது.

குறித்தஊர்திபவனியைஉணர்வெ ழுச்சியுடன் வரவேற்ற வவுனியா மக்கள்தமது அஞ்சலிகளைச்செலுத்தி யிருந்தனர்.



# தெளிவூட்டல் நிகழ்வு

(சியாஜ்)

நாட்டில்இடம்பெறும்திடீர்மரணங் களை விசாரணை செய்வதற்கென நீதி அமைச்சால் திடீர் மரண விசாரணை யாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதிலும் முஸ்லிம் மரணங்களின் போது 24 மணிநேரத்திற்குள் நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் முஸ்லிம் திடீர் மரண விசாரணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும் இது விடயமாக பொது மக்களுக்கு தெளிவின்மை காணப்படுகின்ற காரணங்களால் மரண விசாரணையா ளருக்கும் மக்களுக்கும் இடையில் பல சந்தர்ப்பங்களில் சிக்கல்கள் ஏற்படுகின்றது. இது விடயமாக மக்களுக்கு தெளிவூட்டும்நிகழ்வு ஒன்று இன்று (சனிக்கிழமை) கற்பிட்டி பஸார்ஜாம்ஆ பள்ளிவாசலில் பிற்பகல் 4.15 மணிக்கு கற்பிட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ்.எம் நாசீம் தலைமையில் இடம்பெற உள்ளது.

இந் நிகழ்விற்கு அனுபவம் வாய்ந்த திடீர் மரண விசாரணையாளர்கள் மற்றும் வளவாளர்கள் கலந்து கொள்ள உள்ளதுடன் இலங்கையின் திடீர் மரண விசாரணை சம்பந்தமான சட்டதிட்டங்கள், முஸ்லிம் திடீர் மரண விசாரணையாளர்கள் நியமிக்கப்பட்டதன் நோக்கம், உடற்கூற்று செய்யப்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் மற்றும் திடீர் மரண விசாரணையினால் மக்களுக்கும், சுகாதார திணைக்களத்திற்கும், நாட்டிற்கும்கிடைக்கக்கூடியநன்மைகள் சம்பந்தமாகதெளிவூட்டப்படஉள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற நிலையில் பல்வேறு தரப்பினராலும் தமிழர் தாயகம் எங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினராலும் முள்ளிவாய்க்கால் கஞ்சியானது யாழ்ப்பாணம் - மடத்துடி பகுதியில் நேற்றையதினம் வழங்கப்பட்டது.

வீதியில் சென்ற மக்கள் உணர்வுபூர்வமாக முள்ளிவாய்க்கால் கஞ்சியை வாங்கி அருந்திச் சென்றதை அவதானிக்க முடிந்தது.







# யாழில் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நிகழ்வு

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை சங்கானை நகரப் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில், முன்னாள் போராளியான ஜெயசீலன் என்பவர் நினைவுச் சுடரினை ஏற்றி வைத்தார். அதன்பின்னர் இறுதி யுத்தத்தில் உயிர்நீத்த உறவுகளின் ஆத்மா சாந்திக்காக இரண்டா நிமிட அக் வணக்கம் செலுத்தப்பட்டது.





அதன்பின்னர் மக்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. இதில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன், பிரதேச சபையின் உறுப்பினர்களான ஜெயந்தன், கந்தையா இலங்கேஸ்வரன், ஜெசிந்தன், ஆதவன் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# மூதூர் இறால்குழியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

கடந்த கால யுத்தத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்வதோடு, அந்த காலத்தில் நிகழ்ந்த போர் குற்றங்களுக்கு நீதியை கோரும் நோக்குடன், ஒவ்வொரு ஆண்டும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவால் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி நிகழ்வு ஒழுங்கமைக் கப்படுகிறது.

இந்நிலையில், வியாழக்கிழமை திகதி, திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்திலுள்ள இறால்குழி கிராமத்தில், காலை 9.00 மணியளவில், வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் மொத்தம் 39 பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



துயரத்தை பகிர்ந்து கொள்ளும் நினைவு நிகழ்வாக மட்டுமல்லாது, நீதி தேடும் ஒரு சமூக அழைப்பாகவும் இந்நிகழ்வு அமைந்தது.

போர் முடிந்த பின்னரும் நீதி வழங்கப்படாதது குறித்த கேள்விகளை உயிருடன் வைத்திருக்க, இவ்வாறு மக்கள் ஒருங்கிணைந்து நினைவு நிகழ்வை அனுஷ்டிப்பது முக்கியமான நகர்வாகும்.




# முள்ளிவாய்க்கால் அவலத்தை நினைவு கூர்ந்து வவுனியாவில் கஞ்சி பரிமாறல்

முள்ளிவாய்க்கால் கஞ்சி எனப்படும் இறுதி யுத்தத்தின் போது மக்களின் அவலங்களை வெளிப்படுத்தும் கஞ்சி வழங்கும் செயற்பாடு வெள்ளிக்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.



வவுனியா மொத்த மரக்கறி விற்பனை நிலையத்துக்கு முன்பாக மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தில் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் பல பொதுமக்கள் வருகைதந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை பருகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் உணர்வுபூர்வமாக முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு திருகோணமலை , 3 ஆம் கட்டை சந்தியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களால் வியாழக்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி பரிமாறப்பட்டதோடு நினைவஞ்சலி நிகழ்வும் இடம் பெற்றது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு மிகவும் உணர்வுபூர்வமாக இடம் பெற்றதுடன் நிகழ்வில் அதிகளவான



பொதுமக்கள் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை குச்சவெளி வேலூரில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தினை முன்னிட்டு, கடந்த யுத்தத்தில் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் நிகழ்வுகள் நீடித்த வலியையும், அரசால் மறுக்கப்படும் நீதிக்கான மக்களின் போராட்டத்தையும் வெளிப்படுத்தும் முக்கியமான வலையொலியாக மாறியுள்ளன.

அந்தநிலையில், 2025 மே 16 ஆம் திகதி, திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி வேலூரர் பகுதியில், மக்களின் பங்கேற்புடன் முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி வழங்கும் நிகழ்வு நடைபெற்று முடிந்தது.

இந்நிகழ்வில், காணாமற்போனோரின் உறவுகள், கிராமப்புற மக்களும், சமூகச் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டு தங்கள் துயர அனுபவங்களைப் பகிர்ந்ததோடு,



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வாழ்வுகளைப் பற்றி பேசினர்.

நிகழ்வு, சமூக நினைவாற்றலை பாதுகாத்து, இனநீக்கம், உயிரிழப்பு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிரான மக்களின் எதிர்வினையாகவும் அமைந்தது.

நிகழ்வை வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஒருங்கிணைத்தது.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டனர்.

இது குறித்து நேற்றைய தினம் தமிழ் அரசு கட்சியின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பில் தாம் எடுத்துக்கூறினர் என்றும், அதுபற்றி கட்சியின் மத்திய குழுவில் ஆராய்ந்து பதிலளிப்பர் என்று தமிழ் அரசுக் கட்சியினர் பதிலளித்தனர் எனவும் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான சித்தார்த்தன் தெரிவித்தார்.

அதேவேளை வட, கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் தமிழ்க் கட்சிகளே ஆட்சி அமைக்க வேண்டும் எனவும், அச்சபைகள் குறிப்பாக தேசிய மக்கள் சக்தியின் வசம் செல்வதற்கு அனுமதிக்கக்கூடாது எனவும் இச்சந்திப்பின்போது இரு கட்சிகளின் பிரதிநிதிகளும் உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

## 4 சபைகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்குறிப்பிட்டவாறு இணைந்து ஆட்சியமைப்பது குறித்து கலந்துரையாடும் நோக்கில் அக்கட்சியினதும், ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட்டணியினதும் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை சுமந்திரனின் யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட்டணியின் சார்பில் சுரேஷ் பிரேமசந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வேந்தன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

அதன்படி தமிழரசுக்கட்சி கோரியது போன்று அக்கட்சி முதல்நிலை பெற்றிருக்கும் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்கு தாம் ஒத்துழைப்பு வழங்கத்தயாராக இருப்பதாக ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட்டணியின் பிரதிநிதிகள் அறிவித்தனர்.

அதேவேளை ஏற்கனவே வவுனியா மாநகரசபையில் தமது ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட்டணி ஆட்சியமைப்பதற்கு தமிழ்அரசுக்கட்சி இணக்கம் தெரிவித்திருக்கும் நிலையில், நல்லெண்ண அடிப்படையில் மாந்தை மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் பிரதேச சபை, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகிய 4 உள்ளூராட்சிமன்றங்களிலும் தாம் ஆட்சியமைப்பதற்கு இடமளிக்கவேண்டும் எனவும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் கோரிக்கையொன்றை முன்வைத்தனர்.

அதற்குப் பதிலளித்த தமிழ் அரசுக் கட்சியின் பிரதிநிதிகள், தமது கட்சி முன்னிலை வகிக்கும் உள்ளூராட்சிமன்றங்களில் தாமே ஆட்சியமைக்கவேண்டும் என ஏற்கனவே தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்குழுக்கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், ஆகவே இதுபற்றி தமது கட்சியின் மத்திய குழுவில் கலந்துரையாடியதன் பின்னர் வெகுவிரைவில் தீர்மானமொன்றை அறிவிப்பதாகவும் தெரிவித்தனர்.

கட்சிகளின் இந்தச் சந்திப்புத் தொடர்பில் நேற்று செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிசபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் நாங்கள் தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்துக்குப் பிறகு ஒரு அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றோம். அதாவது தமிழ்க் கட்சிகளோடு, முஸ்லிம் கட்சிகளோடு நாங்கள் பொது அளவிலேயே ஓர் இணக்கப்பாட்டை எடுத்திருக்கின்கிறோம். எந்தெந்தச் சபைகளில் எந்தக் கட்சிக்குக் கூடுதலான ஆசனங்கள் இருக்கின்றதோ அந்தச் சபைகளிலே அந்தக் கட்சி அப்படியாக நிர்வாகத்தை அமைப்பதற்கான ஆதரவை மற்றைய கட்சிகள் வழங்கவேண்டும் என்பது எங்களது கோரிக்கை.

அது பெரும்பாலும் சாதகமாக மற்ற கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவருகின்றது. இரண்டு பிரதான முஸ்லிம் கட்சிகளுடனும் நாங்கள் இணக்கப்பாடுடன் இருக்கின்றோம். ஆனால், ஒவ்வொரு சபை சபையாகப் பேசி சரியான தீர்மானங்களுக்கு இன்னும் வரவில்லை. அதைப்போல் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் சந்திப்புகள் நடைபெற்றுள்ளன. இன்றைக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் நான்கு பேர் நல்லூரில் எனது வீட்டுக்கு வந்திருந்தனர். எமது கட்சியின் தலைவர் சிவஞானமும், நானும் அவர்களுடன் உரையாடினோம்.

சித்தார்த்தன், செல்வம் அடைக்காலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியில் தலைவர் வேந்தன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது பொது இணக்கப்பாட்டுடன் சேர்ந்து, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் இன்னொரு கோரிக்கையையும் முன்வைத்திருந்தனர். அநேகமான சபைகளில் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சிதான் கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஆகவே, தவிசாளர் நியமனத்தைப் பொறுத்தவரை இந்த உடன்பாட்டுக்கு அமைய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குத்தான் தவிசாளர் பதவி செல்லவேண்டும். கணிசமான ஆசனங்களை மற்றக் கட்சிகள் கொண்டிருந்தால் அந்தக் கட்சிக்குப் பிரதித் தவிசாளர் பதவி வழங்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய யோசனை. ஆனால், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் இன்று எங்களைச் சந்தித்தபோது இதற்கு மேலதிகமாக தங்களுக்கு தவிசாளர் பதவியைக் கொடுக்குமாறு ஒரு விண்ணப்பத்தை முன்வைத்தனர்.

மிக அதிகமான சபைகளில் தமிழ் அரசுக் கட்சிக்குத்தான் ஆட்சி அமைகின்ற சூழ்நிலையில், நல்லெண்ணத்தின் அடிப்படையில் தமக்கு நான்கு சபைகளில் தவிசாளர் பதவியை விட்டுத்தருமாறு கேட்டுள்ளார்கள். குறிப்பாக, மானிப்பாய் பிரதேச சபை, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய சபைகளில் தவிசாளர் பதவியை அவர்கள் கோருகின்றனர்.

இந்த விடயத்தில் எங்களுடைய கட்சியின் தீர்மானம் ஒன்று இருக்கின்ற காரணத்தால் அதற்கு விதிவிலக்காக நாங்கள் நடப்பதாக இருந்தால், திரும்பவும் கட்சி தீர்மானம் ஒன்று எடுக்கவேண்டியிருக்கும் என்பதை நாங்கள் அவர்களுக்குத் தெரியப்படுத்தி இருக்கின்றோம்.

அதுமட்டுமன்றி இந்தப் பொதுவான இணக்கப்பாட்டுக்கு மாறாக செயற்படுவதாக இருந்தால், அந்தந்த பிரதேசத்தில் இருக்கின்ற எமது கட்சிச் செயற்பாட்டாளர்களுடனும் நாங்கள் கலந்துரையாடவேண்டும். ஆகையினாலே இங்கே இது சாத்தியமா என்பதை ஆராய்ந்து அவர்களுக்குப் பதில் கொடுப்பதாகச் சொல்லி இருக்கின்றோம் - - என்றார்.

## ஐ.நாவின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு நாளைய தினத்துடன் (18) 16 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கை ஆளும்தரப்பினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தோற்கடிக்கப்பட்டு, நாட்டில் 26 வருடகாலம் நிலவிய போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்ட நாளைய தினத்துடன் (18) 16 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. ஆனால் யுத்தம் முடிவுக்குவந்து நீண்டகாலம் கடந்திருக்கின்ற போதிலும், பாதிக்கப்பட்ட தமிழ் பெண்களின் நீதிக்கான போராட்டம் இன்னமும் தொடர்கின்றது.

போரில் ஈடுபட்ட இருதரப்பினரும் எண்ணிலடங்கா மீறல்களில் ஈடுபட்டனர். போரின் இறுதிவாரங்களில் அரசபடையினரால் பிடிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பெண் போராளிகள் மற்றும் தமிழ் பெண்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு, கொல்லப்பட்டனர். இராணுவத்தினர் அதனை தமக்கான போர்வெற்றிக் கேடயங்களாகக் கருதி புகைப்படங்கள் எடுத்தும், ஒளிப்பதிவு செய்தும் வைத்திருந்தனர். அவற்றில் கொல்லப்படுவதற்கு முன்னர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கக்கூடும் எனக் கருதக்கூடியவகையில் சடலம் கண்டறியப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியாவின் புகைப்படமும் உள்ளடங்குகின்றது.

இவ்வாறு அரச அனுசரனையுடன் தமிழர்களுக்கு எதிராக பாலியல் அத்துமீறல்கள் நிகழ்த்தப்பட்டன. போரின் பின்னர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் பெண்கள் மற்றும் ஆண்கள் பலர் பாதுகாப்புப்படையினரால் பாலியல் ரீதியிலான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இருப்பினும் இலங்கையில் ஆட்சிபீடமேறிய ஆளும்தரப்புக்கள் பாலியல் ரீதியான வன்முறைகளிலும் சட்டவிரோத படுகொலைகள், சித்திரவதைகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல்கள் உள்ளிட்ட மிகமோசமான மனித உரிமை மீறல்களிலும் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினரைப் பொறுப்புக்கூறச்செய்வதற்குத் தவறியிருக்கின்றன.

அதேவேளை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட, கிழக்கு மாகாணங்களில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் இராணுவமயமாக்கல் நடவடிக்கைகள், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச்சேர்ந்த முன்னாள் பெண் போராளிகள் மீண்டும் பாலியல் அத்துமீறல்களுக்கு உள்ளாக்கப்படக்கூடிய அச்சுறுத்தலைத் தோற்றுவித்துள்ளது. உண்மையையும், சர்வதேச நீதியையும் கோரி பல வருடகாலமாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் மற்றும் மனைவிமார் உள்ளிட்ட பெண்கள் அச்சுறுத்தல்களுக்கும், மீறல்களுக்கும், பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களுக்கும் முகங்கொடுத்துவருகின்றனர்.

இலங்கையில் குற்றவாளிகள் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்வதன் காரணமாக பாதிக்கப்பட்ட தமிழர்கள் உள்ளக நீதிப்பொறிமுறையில் நம்பிக்கை இழந்திருப்பதுடன் அந்நீதியை வேறு இடங்களில் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். அதேபோன்று சர்வதேச குற்றங்களில் ஈடுபட்ட இலங்கையை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு சகல வடிவங்களிலுமான நீதி அதிகார வரம்பெல்லையைப் பயன்படுத்தவேண்டியது அவசியம் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இவ்வாறானதொரு பின்னணியில் குற்றமிழைத்தோருக்கு எதிராக வழக்குத்தொடர்வதற்கும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கக்கூடிய ஆதாரங்களைத் திரட்டுகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் 'இலங்கை பொறுப்புக்கூறல் செயற்திட்டம்' மாத்திரமே தற்போது எஞ்சியிருக்கின்ற ஒரேயொரு வழியாகும். அச்செயற்திட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தொடரில் புதுப்பிக்கப்படுவதுடன், அதனை இலங்கை அரசாங்கம் ஆதரிக்கவேண்டும். இசைப்பிரியா போன்ற பெண்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு அச்செயற்திட்டம் தொடரவேண்டியது மிக அவசியமாகும் என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## சஜித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்த பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றிருந்தது. இந்த பேச்சுவார்த்தையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் நிமல் சிறிபால டி சில்வா, துமிந்த திஸாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் அநுர பிரியதர்ஷன யாபா, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேஷன், பிரதி தலைவர் பழனி திகாம்பரம், இலங்கை தொழிலாளர் காங்ரஸ் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோரும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, பொதுச்செயலாளர் தலதா அத்துகோரள, தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களும் இந்த பேச்சுக்களில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில் இந்த தரப்பினருக்கிடையில் வியாழக்கிழமை மாலை கொழும்பிலுள்ள ஹோட்டலொன்றில் மீண்டுமொரு பேச்சுவார்த்தை இடம்பெற்றது. எனினும் இந்த பேச்சுவார்த்தையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பங்கேற்கவில்லை. இதில் கலந்து கொண்டிருந்த ஏனைய தரப்பினர் இன்று எதிர்க்கட்சி தலைவரை சந்தித்து இறுதி தீர்மானத்தை எடுப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேஷன்,

பொது எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு பெரும்பான்மை அற்ற உள்ளூராட்சிமன்றங்களில் எவ்வாறு ஆட்சியமைப்பது என்பது குறித்து ஜனநாயக ரீதியில் கலந்துரையாடப்பட்டது. அரசாங்கத்துக்கு பெரும்பான்மை காணப்படும் உள்ளூராட்சிமன்றங்களில் நாம் கைவைக்கப் போவதில்லை. அவற்றில் ஆட்சியமைக்க வேண்டிய தேவை எமக்கில்லை. அவ்வாறு நாம் செய்யப் போவதுமில்லை.

அதற்கமைய பொது எதிர்க்கட்சியின் பிரதிநிதிகள் சனிக்கிழமை (இன்று) எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுடன் இறுதி கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. அந்தக் கலந்துரையாடலின் போது எடுக்கப்படும் தீர்மானத்தை நாட்டுக்கு அறிவிப்போம். எனவே இது குறித்து ஆளும்தரப்பு கலவரமடையத் தேவையில்லை. ஆளும்தரப்பின் கலவரமோ கோபமோ எமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. காரணம் இது ஜனநாயகமாகும்.

ஆளும்தரப்பும் இதனையல்லவா செய்கின்றது? ஆளும்தரப்புக்கு பெரும்பான்மை இல்லாத உள்ளூராட்சிமன்றங்களில் அவர்கள் சுயேச்சைக் குழுக்களுடன் பேச்சு முன்னெடுத்துள்ளனர். சில மாவட்டங்களில் எனது கட்சியின் உறுப்பினர்களுடன்கூட பேச்சு நடத்தியிருக்கின்றனர்.

இவற்றை பகிரங்கமாகக் கூறவேண்டும். காரணம் அது தவறல்ல. நியாயமானது. இந்த தேர்தல் முறைமையின் கீழ் இது ஜனநாயகமானது. அதற்கமைய எதிர்க்கட்சி தலைவருடன் பேச்சுக்களை முன்னெடுத்து தீர்வொன்றை எட்டுவோம் என்றார்.

## தென்னக்கோனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு, கடந்த சில வாரங்களாக நாடாளுமன்ற வளாகத்தில் கூடி ஆரம்பகட்ட ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் மே 19 முதல் விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பிக்க இருக்கிறது.

விசாரணை குழுவுக்கு முன்னால் ஆஜராகுமாறு கடந்த வாரமே தென்னக்கோனுக்கு அழைப்புக்கட்டளை அனுப்பப்பட்டுள்ளது. அவர் விசாரணைக்கு அந்தத் தினத்தில் ஆஜராவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் விசாரணைக் குழு வியாழக்கிழமை நாடாளுமன்ற வளாகத்தில்கூடி, விசாரணைகளை மேற்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடியது.

## முன்னாள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்த கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி நேற்றுப் பிடியாணை பிறப்பித்தார்.

லஞ்ச ஒழிப்பு ஆணையம் சமர்ப்பித்த மனுவை பரிசீலித்த பின்னர் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

லஞ்சஒழிப்பு ஆணையம் தனது வழக்கை நீதிமன்றத்தில் முன்வைத்து, லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் விதிகளின்படி சந்தேகநபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பிடியாணை பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தைக் கோரியது.

மஹிந்தானந்த அளுத்கமகே கைது செய்யப்பட்டால் பிணை பெறக்கூடிய வகையில் முன்பிணை கோரி நீதிமன்றத்தில் புகார் அளித்திருந்தார், வியாழக்கிழமையே சம்பந்தப்பட்ட மனுவை சமர்ப்பிக்க அனுமதி வழங்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

கோரிக்கையை பரிசீலித்த தலைமை நீதிவான், தொடர்புடைய கோரிக்கையை அடுத்த திங்கட்கிழமை சமர்ப்பிக்க உத்தரவிட்டார்.

இருப்பினும், லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் பல்வேறு விதிகளின்படி பிடியாணைகளை பிறப்பிக்குமாறு நேற்று சிறப்புப் பிரேரணையை சமர்ப்பித்தது.

காலைக்கதிர் Kalaikkathir

# சுவாமி விபுலானந்தர் அகிலத்திற்கு கிடைத்த ஒரு பொக்கிஷம் ஆவார்

## அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம புகழாரம்

(சகாதேவராஜா)

கல்வித் துறையில் மாத்திரமல்ல ஆன்மீகத் துறையிலும் துறைபோன ஒருவராக சுவாமி விபுலானந்தர் அவர்கள் திகழ்ந்திருக்கின்றார். அவர் அகிலத்திற்கு கிடைத்த ஒரு பொக்கிஷம்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம காரைதீவில் உரையாற்றுகையில் புகழாரம் சூட்டினார்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டு விழாவையொட்டிய இந்து சமய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது மாவட்ட மட்ட பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில் இடம்பெற்ற போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

உலகில் முதல் தமிழ்ப் பேராசிரியரான அவர் பல மொழிகளிலே பாண்டித்தியம் பெற்று பல துறைகளில் பாண்டித்தியம் பெற்ற ஒருவராக இருந்தார்.

மிக முக்கியமாக இசைத்துறையிலே அவர் ஆற்றிய சேவையும் இசை துறையில் அவர் உருவாக்கிய யாழ் நூலும் உலகப் பிரசித்தி பெற்றவை.

உண்மையாக சொல்லப் போனால் அவர் பிரதேசத்துக்கு மாத்திரம் இல்லாமல் பொதுவான ஒரு தேசிய உரிமையாக ஒரு தேசிய பொக்கிஷமாக கொண்டாடப்பட வேண்டிய ஒருவர்.



அவரது தந்தை ஒரு கிராம உத்தியோகத்தர். அரச சேவையாளர். அதேவேளை சுவாமிகள் தாய்நாட்டுக்காக இராணுவ வீரராகவும் சேவையாற்றி இருந்தார்.

அவர் இப் பூவுலகில் வாழ்ந்த 55 வருடத்தில் இந்து சமயத்திற்கும் தமிழுக்கும் மண்ணுக்கும் செய்த சேவை அளப்பரியது.

பௌதீக துறையில் பட்டதாரி அதேவேளை தமிழ்ப் பண்டிதர்.

கல்வித் துறையில் ஆன்மீக துறையில் துறை போன ஒரு

பரமகுருவானவர். ஸ்ரீ அவர் துறவி. அவரது ஆசீர்வாதம் அனைவருக்கும் கிடைக்கும்.

ஏனெனில், அவர் சாதிமத பிரதேசம் கடந்தவர் . அவர் ஒரு தேசிய உரிமையாக தேசிய பொக்கிஷமாக கொண்டாடப்பட வேண்டிய உன்னத புருஷராவார். - என்றார்.

அவரது சிங்கள உரையை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் தமிழில் மொழிபெயர்த்தார்.





# பாலஸ்தீன அல்–நக்பா நினைவு நிகழ்வில் பிரதி சபாநாயகர்றிஸ்வி சாலி பங்கேற்பு

(சினீஸ் கான்)

'நக்பாவை முடிவுக்குக் கொண்டு வருதலும் பாலஸ்தீன மக்களின் பிரிக்க முடியாத உரிமைகளை அடைவதற்கான சர்வதேச நடவடிக்கையும்' என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்ற நக்பா நினைவு தின நிகழ்வு, வியாழக்கிழமை கொழும்பு ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு இலங்கையில் உள்ள பாலஸ்தீன தூதரகம் மற்றும் பாலஸ்தீன பேரழிவை நினைவுகூரும் இலங்கை ஒருமைபாட்டுக் குழு இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, பிரதி சபாநாயகக் வைத்தியர் றிஸ்வி சாலி கலந்துகொண்டு உணர்வுபூர்வமாக உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் சமயத்தலைவர்கள், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ, வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் மற்றும் பலஸ்தீன பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.











காலைக்கதிர் Kalaikkathir

# இறக்கமாம் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(ஸாகிர்)

அம்பாறை மாவட்டத்தின் இறக்கமாம் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) இறக்காமம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம் ரஸ்ஸானின் ஏற்பாட்டில், பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவர் மஞ்சுள ரத்நாயக்கவின் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினறும் அம்பாறை மாவட்ட கரையோரபிரதேசஒருங்கிணைப்பு குழுத் தலைவருமாகிய ஏ. ஆதம்பாவா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான அஷ்ரப் தாஹிர், எம்.எஸ் உதுமாலெப்பை ஆகியோரும் தேசிய மக்கள் சக்தியின் இறக்காமம் பிரதேச அமைப்பாளர் அலிசப்ரி மற்றும் உதவி பிரதேச செயலாளர், கணக்காளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோத்தர்கள், முப்படையினர், திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் தலைவர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக செயலாளர்கள் எணப்பலரும் கலந்து கொண்டனர்.









# பிரதேசசபை வேட்பாளர்களுடன் மு.கா. பிரமுகர்கள் சந்திப்பு

(ஹமீட்)

சம்மாந்துறை, இறக்காமம், காரைதீவு மற்றும் பொத்துவில் பிரதேச சபைகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பிரதேச சபை உறுப்பினர்கள், பட்டியல் உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்த்தர்களுடனான கலந்துரையாடல் புதன்கிழமை இடம்பெற்றது.

இதன்போது அம்பாரை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, கட்சியின் உச்சபீட உறுப்பினரும் மாவட்ட செயலாளருமான ஏ.சி.சமால்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.05.2025இல் வெளியிடப்பெற்றது